
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1313

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

131

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




## ஜனநாயக ஆட்சிக்கு, சமூக சீர்திருத்தமே அடித்தளம்!

*27.09.1936* அன்று திண்டுக்கல்லில், தென் ஜில்லாக்கள் 'ஜஸ்டிஸ் மாநாடு' எழுச்சியுடன் நடைபெற்றது. மாநாட்டிற்கு, சென்னை, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, ராமநாதபுரம், கோவை, சேலம், திருநெல்வேலி, வட ஆற்காடு, தென்னாற்காடு முதலிய பல ஜில்லாக்களில் இருந்தும், உள்ளூரிலிருந்தும் சுமார் 7,000 பேர் வருகை புரிந்தனர்.

மாநாட்டுத் தலைவர் பெரியார் மற்றும் மாநாட்டிற்கு வந்திருந்த பொப்பிலி அரசர் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் அனைவரும், நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்வலத்தில் 5,000-க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். நகராட்சி அலுவலகத்திற்கு ஊர்வலம் சென்றபோது, நகர்மன்றத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள் இணைந்து, ஊர்வலத்தில் வந்திருந்த மூன்று அமைச்சர்களுக்கு வரவேற்பு கொடுத்தனர். பின்னர், அங்கிருந்து அனைவரும் புறப்பட்டு மாநாட்டுக் கொட்டகைக்குச் சென்றடைந்தனர்.

மாநாட்டில், ஜஸ்டிஸ் கட்சியின் கொடியை மீனாம்பாள் சிவராஜ் ஏற்றிவைத்து, கொடி ஏற்றுவதற்கான நோக்கத்தை விளக்கிப் பேசினார். அதன்பிறகு பெரியார், பொப்பிலி அரசர் உள்ளிட்ட முக்கிய தலைவர்களுக்கு வரவேற்புப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. அதனையடுத்து, பொப்பிலி அரசர் மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசியபோது, "சமூக சீர்திருத்தம் ஏற்படாமல், உண்மையான ஜனநாயக ஆட்சி ஏற்படாது என நாம் நம்பியதால்தான் சமூக சீர்திருத்தம், ஒடுக்கப்பட்டோர் முன்னேற்றம் முதலிய விஷயங்களில் நாம் ஆதி முதற்கொண்டே கவனம் செலுத்தி வருகிறோம்" என்றார்.

அவரை அடுத்து, எம்.எஸ்.பி.சோலை நாடார் வரவேற்புரை வாசித்தார். அடுத்து, மாநாட்டுக்குத் தலைமை வகித்த பெரியார் பேசும்போது, நீதிக்கட்சியின் இன்றியமையாமை குறித்தும், சமூக நீதிக்கு எதிரான காங்கிரஸின் போக்குகள் குறித்தும் விவரித்தார். மீண்டும் மதிய உணவுக்குப் பிறகு மாநாடு கூடியவுடன், பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விருதுநகர் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பெரியாரின் வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொள்வது என இந்த மாநாட்டிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மதுரை ஜில்லா போர்டை, தாமதிக்காமல் மதுரை ஜில்லா போர்டு, திண்டுக்கல் ஜில்லா போர்டு எனப் பிரித்து, திண்டுக்கல் ஜில்லா போர்டை, திண்டுக்கல்லில் வைக்க வேண்டும் என்று அரசாங்கத்தை மாநாடு கேட்டுக்கொண்டது. இதேபோல இதுவரை பிரிக்கப்படாத மற்ற ஜில்லாக்களையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று மாநாடு கேட்டுக்கொண்டது.

அதன்பின்னர், ஈ.வெ.கிருஷ்ண சாமி, ஜம்புலிங்க முதலியார், என்.ஆர்.சாமியப்பா, கே.கே.ஏ.பெரியசாமி, முத்துசாமி வல்லத்தரசு உள்ளிட்ட மாநாட்டுக்கு வர முடியாத முக்கிய பிரமுகர்களிடமிருந்து வந்திருந்த கடிதங்கள் வாசிக்கப்பட்டன. இறுதியாக, பெரியாரின் முடிவுரையுடன் மாநாடு கலைந்தது. பின்னர், மாலையில் அதே மாநாட்டுக் கொட்டகையில் பொதுக் கூட்டம் ஒன்று கூடியது. பொதுக்கூட்டத்திற்கும் பெரியார் தலைமை வகித்தார். பார்ப்பனர் அல்லாத ஒரு இயக்கத்தைப் பற்றியும், காங்கிரஸ் கட்சியைப் பற்றியும் பட்டுக்கோட்டை அழகிரி, மீனாம்பாள் சிவராஜ் முதலானோர் பேசினர். மஞ்சுளா பாய் சில பாடல்களைப் பாடினார். அதன்பிறகு, பெரியார் உரையுடன் கூட்டம் முடிவுற்றது.

...கூட்டம் திரளும்

## பாலியல் வன்கொடுமை வழக்கு வாபஸ்! புதிய ஆபத்தான போக்கு!

பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை வழக்கில், நீதிமன்றத்தில் வழக்கினை வாபஸ் பெற வைத்ததன்மூலம் த.வெ.க. அரசு, பெரும் ஆபத்தைத் தொடங்கி வைத்துள்ளதாக, சமூக வலைதளத்தில் குற்றம் சாட்டியுள்ளார், அரசியல் விமர்சகர் மருது.

"திருவைகுண்டம் எம்.எல்.ஏ. உட்பட சிலர் மீது, ஒரு பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமைப் புகார் அளித்திருந்தார். கடந்த சில நாட்களுக்கு முன்பு, இது தொடர்பாகப் பேசிய அமைச்சர் ஆனந்து அந்த விவகாரத்தில் எம்.எல்.ஏ.வுக்கு தொடர்பு இல்லை என்று, தெனாவட்டாகப் பேசும்போதே, ஏதோ நடந்துகொண்டிருக்கிறது என்பதை யூகிக்க முடிந்தது.

அதைப்போலவே, அந்தப் பெண் சமரசமாக உள்ளதால், 'வழக்கை ரத்துசெய்ய வேண்டும்' என்று உயர் நீதிமன்றத்தின் முறையிட, அதனை ஏற்று பாலியல் வன்கொடுமை வழக்கை ரத்துசெய்துள்ளது.

இது மிகவும் ஆபத்தான ஒன்றாகும். எந்த ஒரு பாதிக்கப்பட்ட பெண்ணையும் மிரட்டி, அதன்மூலம் அந்த வழக்கினை ரத்துசெய்வது என்பது எளிதில் நடைபெற வாய்ப்புள்ளது.

பொதுவாக, பாலியல் வன்கொடுமை தொடர்பான வழக்குகளில், நீதிமன்றம் இதுபோன்ற நிலை எடுத்தது கிடையாது.

கடந்த மாதம், சென்னை உயர் நீதிமன்றத்தில், நீதி அரசர் பரத சக்கரவர்த்தி, தன் முன்னிலையில் வந்த போர்ஜரி வழக்கை சமரசத்தின் பேரில் ரத்துசெய்ய வேண்டும்; வழக்கின்போது அவ்வாறு ரத்துசெய்ய முடியாது. போர்ஜரி நடந்ததா இல்லையா என்பது விசாரணையின் மூலம் மட்டுமே முடிவுசெய்ய வேண்டும் என்று தெளிவாகக் கூறினார்.

பணம் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது என்பது மட்டுமல்ல, மாறாக போர்ஜரி என்ற குற்றம் நடந்துள்ளதா என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும் என்று தெரிவித்தார். பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை வழக்கை, சமரசத்தின் பேரில் ரத்துசெய்தது கண்டனத்துக்குரியதாகும்.

இப்படிப்பட்ட கேவலமான செயலில்தான் தமிழக வெற்றிக் கழகம் ஈடுபட்டிருக்கிறது என்பது, அதைவிட மிகக் கண்டனத்திற்குரியதாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

கிரிமினல் வழக்குகளில், இதுபோன்ற சமரசத்தை ஊக்குவிப்பதன் மூலம், பணபலம், அரசியல் செல்வாக்கு காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சேரவேண்டிய நீதி, தடைசெய்யப்படுகிறது. இந்த ஆபத்தான போக்கு தடுக்கப்பட வேண்டும்.

# பாசறை படிப்பறை


கௌதம் ராஜ்

131

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

*2022*-ஆம் ஆண்டு, 'தியாகத்தின் திருவுரு' என்று போற்றத்தக்க 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150-வது பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாட முடிவெடுத்தது, நம் திராவிட மாடல் அரசு. அதன் நீட்சியாக, 14 முக்கிய அறிவிப்புகளைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவித்தார், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். இவை அனைத்துக்கும் முத்தாய்ப்பாக, சிதம்பரனாரின் பன்முகத் திறனை முழுமையாக அறியும் வகையில், 'தமிழரசு' இதழின் சார்பில், 'வ.உ.சி. - 150' என்ற சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

வ.உ.சி. ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் எழுத்தாளுமைகளின் பங்களிப்பில், 178 பக்கங்களைக் கொண்ட இந்நூல், இன்றைக்கும் தமிழ் மின்னூலகத்தில் வாசிக்கக் கிடைக்கிறது.




தமிழ்நாட்டின் முக்கியமான ஆய்வாளர்களான ஆ.சிவசுப்பிரமணியன், ஆ.இரா. வேங்கடாசலபதி, வீ.அரசு, மா.ரா.அரசு, ப.திருமாவேலன், ரெங்கையா முருகன், குருசாமி மயில்வாகனன், ஆ.அறிவழகன் ஆகியோரின் படைப்புகள் இதில் இடம்பெற்றுள்ளன.

வ.உ.சி. அவர்களின் வாழ்க்கையை, ஒருசேர எடுத்துக் கொண்டால், அவர் அந்தக் காலகட்டத்தின் முக்கியமான இயக்கங்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளார். யாரும் செய்யத் தயங்கும் காரியங்களைத் தலைமேற் போட்டுக் கொண்டு ஆற்றியுள்ளார். இலக்கியம், தத்துவம், சமயத் துறைகளில் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். இவை எல்லாம் பிரிட்டிஷ் அரசை எதிர்த்து, சிறைக் கொடுமைகளுக்கு அஞ்சாமல், நெஞ்சுரத்துடன் அவர் மேற்கொண்ட காரியங்கள்.

> **வ.உ.சி. என்ற ஆளுமையின் ஆற்றலையும் வீச்சையும், மிகச் சுருக்கமாக அறிய விரும்புவோர், அவசியம் வாசிக்கவேண்டிய நூல்.**

சுயமரியாதை இயக்கத்தில், பெரியாருடன் இணைந்து வ.உ.சி. ஆற்றிய பணிகளையும் இருவரும் கொண்டிருந்த நட்பையும், பரஸ்பர மரியாதையையும் இந்த இதழில், ப.திருமாவேலன் எழுதிய கட்டுரை மிகத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

'விவேகபாநு', 'இந்துநேசன்', 'தமிழ் நேஷனல் பத்திரிகை', 'சர்வ ஜன மித்திரன்' ஆகிய இதழ்களுடன் வ.உ.சி. கொண்டிருந்த தொடர்பை, ஆய்வாளர் மா.ரா.அரசு பதிவு செய்துள்ளார். திருநெல்வேலியில் ஆங்கில அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஏற்பட்ட வெகுமக்கள் எழுச்சியின் பின்னணியில், வ.உ.சி. எப்படி முக்கிய கன்னியாகச் செயல்பட்டார் என்பதை ஆய்வாளர் ஆ.இரா.வேங்கடாசலபதி சுருக்கமாகப் பதிவுசெய்துள்ளார்.

வ.உ.சி.யின் தமிழுணர்வு குறித்தும் அவரது தமிழ்ப் பணிகள் குறித்தும் ஆய்வாளர்கள் வீ.அரசு, ஆ.அறிவழகன், ரெங்கையா முருகன் ஆகியோரும், அவரது பொருளாதார தேசியம் பற்றி ஆ.சிவசுப்பிரமணியன் அவர்களும், அவரது கப்பல் கம்பெனியின் கதையை குருசாமி மயில்வாகனன் அவர்களும், இந்த இதழில் பதிவுசெய்துள்ளார்கள். பின்னிணைப்பாகப் பல்வேறு அறிய ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

வ.உ.சி. என்ற ஆளுமையின் ஆற்றலையும் வீச்சையும், மிகச் சுருக்கமாக அறிய விரும்புவோர், அவசியம் வாசிக்கவேண்டிய நூல்.

...வாசிப்போம்.

# ஃப்ளாஷ்பேக்



ம.சேசுராசு



## தலைவர் கோட் சூட் போட்ட நாட்காட்டி!

முத்தமிழறிஞர் கலைஞர், தயாளு அம்மையாருடன் ரோம் நகருக்குச் சென்று வந்தபோது, மும்பை விமானநிலையத்தில், கழகத் தோழர்கள் சந்தனமாலை போட்டு வரவேற்றுள்ளார்கள். அந்தப் படம், ஒரு மலர் போடும்போது எனக்குக் கிடைத்தது. அந்தப் படத்தை வைத்து 2010-ஆம் ஆண்டு, தினசரி நாள்காட்டி அட்டையைத் தயாரித்தேன். அந்த நாள்காட்டியை யாருக்குக் கொடுக்கிறோமோ, அவரவர் படமும் இடம்பெறும் வகையில் வடிவமைத்துப் பரிசளித்தேன். இந்த நாள்காட்டியை அப்போதைய மகாராஷ்டிரா துணை முதல்வர் மாண்புமிகு சகன்புஜ்பால் அவர்களை வைத்து மும்பையில் வெளியிட்டோம். சென்னை வந்து, தலைவர் கலைஞரிடமும் வழங்கியபோது, அவர் அதை விரும்பி ரசித்துப் பார்த்தார்.

- ம.சேசுராசு,
மும்பை தி.மு.க., பொறுப்புக்குழுத் தலைவர், மும்பை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

**கருவூலம்**

## சிறை செல்வதற்குத் தயார்!

1962-ஆம் ஆண்டு, மாநிலங்களவையில் இந்தி ஆட்சி மொழிக்கு எதிராக, பேரறிஞர் அண்ணா உரை நிகழ்த்தினார். "இந்தி மொழி திணிக்கப்பட்டால், திராவிட முன்னேற்றக் கழகம் அதை எதிர்த்து, முழுமூச்சாக - ஓயாமல் - கடுமையாகக் கிளர்ச்சி நடத்தும். அதனால், ஏற்படக்கூடிய விளைவுகள் எதுவாக இருந்தாலும் சரி - நாங்கள் ஓயாமல் போராடுவோம். 4 ஆண்டுகளானாலும் - 40 ஆண்டுகளானாலும் சிறை செல்வதற்குத் தயார்!" என்று உரையில் குறிப்பிட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900